# பகுதி IV (அ) — மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண மாகாண சபை

1996 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின்
நிதி (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச் சட்டம்

மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 1996 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதி (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச் சட்டத்தின் (1) ஆம் இலக்க பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் முதல் அமைச்சரும், நிதி, நீதியும் சமாதானமும், பிரதேச நிருவாகம், திட்டமிடல், காணி உள்ளூராட்சி, கல்வி அமைச்சருமாகிய வீரசூரிய திசாநாயக்க முதியன்சேலாகே புஞ்சி பண்டா திசாநாயக்க ஆகிய நான்



மத்திய மாகாண சபையின் 1996 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் நிதி (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச் சட்டம் 1997 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதியில் இருந்து நடைமுறையிலிருக்க வேண்டும் என இத்தால் உத்தரவுபிறப்பிக்கின்றேன்.

டப்ளிவ். எம். பீ. பி. திசாநாயக்க,
முதல் அமைச்சரும், நிதி, நீதியும் சமாதானமும்,
பிரதேச நிருவாகம், திட்டமிடல், காணி,
உள்ளூராட்சி, கல்வி அமைச்சரும்,
மத்திய மாகாண மாகாண சபை.

கண்டி,
1996 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆம் திகதி.

12—439/1

---

### மத்திய மாகாணத்தின் மாகாண சபை

1996 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதி (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச் சட்டம்

குறித்த சில வரிகளையும், உரிமைக் கட்டணங்களையும், ஏனைய கட்டணங்களையும், இறுப்பனவுகளையும், தண்டங்களையும் விதிப்பதற்கும் சேகரிப்பதற்கும் இவற்றோடு தொடர்புபட்ட அல்லது இவற்றின் இடைநேர்விளைவான ஏனைய கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கான ஒரு நியதிச் சட்டம்.

இந் நியதிச் சட்டம் பின்வரும் சட்டங்களுடன் ஒத்திசைவற்றதாகும்.

1. பரிசுப் போட்டிகள் கட்டளைச் சட்டம்.
2. குதிரை ஓட்டத்தின் மீது பந்தயங் கட்டுதல் கட்டளைச் சட்டம்.
3. அரச காணிகள் கட்டளைச் சட்டம்.
4. சுரங்கங்கள், கனிப் பொருட்கள் சட்டம்.
5. நிறுவைகள், அளவைகள் கட்டளைச் சட்டம், அத்துடன்
6. தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இந்நியதிச் சட்டம் மத்திய மாகாணத்தின் 1996 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதி (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம், என்பதுடன் 111 ஆம் அத்தியாயம் தவிர, ஏனைய ஏற்பாடுகள் அதன் சார்பில் அமைச்சரினால் நியமிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தேதியன்று வலுவுடையதாக வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

## அத்தியாயம் I

### பரிசுப் போட்டிகள் மீதான வரி

*பரிசுப் போட்டிகள் மீதான வரி.*

2. (1) மாகாணத்துக்குள்ளாக ஊக்குவிக்கப்படும் அல்லது நடாத்தப்படும் ஒவ்வொரு பரிசுப் போட்டி மீதும், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் விதித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களிலான (இதனகத்துப் பின்னர் 'பரிசுப்போட்டி வரி' எனக் குறிப்பீடு செய்யப்படும்) வரியொன்று விதிக்கப்பட்டு அறவிடப்படுதல் வேண்டும்.

'இந் நியதிச் சட்டத்தின் நோக்கத்துக்காக 'பரிசுப்போட்டி' என்பது பொருளாகவோ, காசாகவோ அல்லது சேவைகளாகவோ பரிசொன்று வழங்கப்படுவதான ஏதேனும் போட்டி என்று பொருளாகும். ஆனால் ஓர் அதிஷ்டலாபச் சீட்டுக் குலுக்கலை உள்ளடக்க மாட்டாது.

(2) (அ) மாகாணத்துக்குள்ளாக ஒரு பரிசுப் போட்டியை ஊக்குவிக்க அல்லது நடாத்த விரும்பு கின்ற ஒவ்வோர் ஆளும், அதற்கென ஆக்கப்பட்டுள்ள இதனகத்துள்ள ஏற்பாடுகளுக்கிணங்க அந் நோக்கத்திற்காக உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.



(ஆ) அமைச்சர், மாகாணத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபருடனான ஆலோசனையுடன், பின்வருவனவற்றை விதித்துரைத்து ஒழுங்கு விதிகளாக்கலாம் :—

(i) பந்தி (2) (அ) என்பதன் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட செற்றில்பட்ட உரிமத்தின் படிவமும், அதற்கெனக் கொடுக்க முன்னர் வேண்டிய கட்டணமும்.

(ii) இந்நியதிச் சட்டத்தின் கீழான ஏதேனும் பரிசுப் போட்டி ஊக்குவிக்கப்படக்கூடிய அல்லது நடாத்தப்படக்கூடிய இடம் அல்லது வளவுகள், அத்துடன்

(iii) அத்தகைய பரிசுப் போட்டியை ஊக்குவிக்கும் அல்லது நடாத்தும் ஆளினால் கொடுத்துதவப்பட வேண்டிய விவரத்திரட்டுக்கள்.

*வரிகள் கொடுப்பதிலிருந்து விலக்கு.*

3. அமைச்சர் மாகாணத்துக்குள்ளாக தரும், கல்வி அல்லது விளையாட்டுக்களை முன்னேற்றும் நோக்கத்திற்காக ஊக்குவிக்கப்படும் அல்லது நடாத்தப்படும் ஏதேனும் பரிசுப் போட்டியை, உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைவாக, இந் நியதிச் சட்டத்தின்கீழ் அறவிடப்படற்பாலதான ஏதேனும் வரியிலிருந்து விலக்களிக்கலாம்.

*உரிமம் இல்லா ஏதேனும் இடத்தை அல்லது வளவுகளை அதிஷ்ட லாபத்துக்காக, அல்லது பரிசுப்போட்டிக்காகப் பயன்படுத்து வது தவறொன்றாகும்.*

4. ஆள் எவரும், இந் நியதிச் சட்டத்தின் கீழ் முதலில் உரிமம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளாமல், பரிசுப் போட்டியொன்றுடன் தொடர்புபட்ட ஏதேனும் நோக்கத்துக்கு ஏதேனும் இடத்தை அல்லது வளவுகளை வைத்திருந்தால் அல்லது பயன்படுத்தினால் அல்லது அத்தகைய இடம் அல்லது வளவுகள் அவ்வாறு வைத்திருக்கப்பட அல்லது பயன்படுத்தப்பட அறிந்து கொண்டு அனுமதித்தால் அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னராக சுருக்குமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணத்தினால் அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத சாதாரண சிறைத்தண்டனை அல்லாதுவிட்டால், தண்டம், சிறைத் தண்டனை ஆகிய இரண்டினாலும் தண்டிக்கப்படுவதற்கு ஆளாதல் வேண்டும்.

*2 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை வெளியீட்டிருந்து ஒரு மாதத்துக்குள்ளாக மாகாண சபை முன்னர் வைக்கப்பட வேண்டும்.*

5. இரண்டாம் பிரிவின் 2 (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும் கசெற்றில் அது வெளியிடப்பட்டதிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாக மாகாண சபை முன்னர் அதன் அங்கீகாரத்துக்கென வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய கட்டளை அங்கீகரிக் தப்படாதவிடத்து, அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் II

### [illegible] மீதான வரி

முன்னர் வைக கப்பட வேண்டும்.

## அத்தியாயம் II

### பந்தயம் மீதான வரி

பந்தயம் மீதான வரி.

6. (1) மாகாணத்துக்குள்ளாகவோ அல்லது அல்லாமலோ நடாத்தப்படும் ஏதேனும் குதிரை ஓட்டத்தின் மீது மாகாணத்திலுள்ள ஏதேனும் இடத்தில் அல்லது வளவுகளில் காசுமீதோ, கடனுக்கோ பிடிக்கப்படும் அல்லது ஏற்றுக்கொள்ளப்படும் ஒவ்வொரு பந்தயத்தின் மீது (இதனகத்தின் பின்னர் 'பந்தய வரி' எனக் குறிப்பீடு செய்யப்படும்) வரியொன்று கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதங்களில் விதிக்கப்பட்டு அறவிடப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) என்பதன் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் கசெற்றில் அது வெளியிடப்பட்டதிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாக மாகாணசபை முன்னர், அதன் அங்கீகாரத்துக்காக வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அது அங்கீகரிக்கப்படாதவிடத்து, அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழான பந்தய வரி புந்தயம் பிடித்த உடனேயே போதுமதியாக வருதல் வேண்டும். அத்துடன் அத்தகைய பந்தய வரியைச் செலுத்துவதற்குப் பொறுப்பாகும் எவரேனும் ஆள் ஒவ்வொரு பஞ்சாங்க மாதத்துக்கும் போதுமதியான பந்தய வரிகளின் கூட்டு மொத்தத்தை அப்பஞ்சாங்க மாதம் முடிவடைந்த 10 நாட்களுக்குள்ளாக மாகாணத்தின் மாதாண இறைவரி ஆணையாளரிடம் செலுத்துதல் வேண்டும்.

(4) பந்தய வரி செலுத்த வேண்டியவரான வேறெவரேனும் ஆள் (3) ஆம் உட்பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது தேதிக்கு முன்னர் அத்தகைய வரிகளைச் செலுத்த தவறுகின்றவிடத்து, அத்தகைய ஆள் தவணை தவறியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் பந்தய வரி தவணை தவறியதாக இருக்கின்றவிடத்து, தவணை தவறியவர் தவணை தவறிய தொகையின் 10 % க்குச் சமமான ஒரு மேலதிகப் பணத் தொகையையும், அதற்குப் பிந்திய ஒரு ஒவ்வொரு மாதத்துக்கும் 2 %. மேலதிக பணத் தொகையையும், ஆகக் கூடுதலான 50 % வரை, தண்டப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

(6) தவணை தவறிய ஏதேனும் பந்தய வரியானது (5) ஆம் உட்பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய தண்டப்பணங்களுடன் சேர் மாகாண சபைக்குச் செல்லுமதியான தவணை தவறிய வரிக் கடன் என்றாற்போன்று தவணை தவறியவரிடமிருந்து அறவிடப்படலாம்.

## அத்தியாயம் III

### காணிகள், கட்டிடங்கள் மீதான வரி

காணிகள் கட்டிடங்கள் மீதான வரி.

7. (1) அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதங்களில் மாகாணத்துக்குள்ளாக அமைந்துள்ள ஏதேனும் காணியின் அல்லது கட்டிடத்தின் தற்போதைய மூலதனப் பெறுமதி மீது வரியொன்றை விதித்து அறவிடலாம்.

ஓராம் உட்பிரிவில் 'காணி' என்ற பதம் அரசுக்கு சொந்தமான ஏதேனும் காணியையும் உள்ளடக்கும், அத்துடன் "கட்டிடம்" என்ற பதம் அரசுக்கு சொந்தமான ஏதேனும் கட்டிடத்தையும் உள்ளடக்கும்.

(2) ஓராமுட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும் கசெற்றில் அது வெளியிடப்பட்டதிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாக மாகாண சபை முன்னர் அதன் அங்கீகாரத்துக்கென வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அது அவ்வாறு அங்கீகரிக்கப்படாவிடத்து, அதன் கீழ் முன்னர், செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியில் இருந்து நீக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) அப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஏதேனும் கட்டிடம் தொடர்பாக "மூலதனப் பெறுமதி" என்பது அக்கட்டிடத்தை நிர்மாணித்தற்கான செலவும், அக்கட்டிடத்துக்கான சீர்திருத்தங்கள், சேர்ப்புக்கள், பொத்திகள், அல்லது இணைப்புக்கள் என்பவற்றுக்கான செலவும், அக்கட்டிடம் நிற்கும் காணியின் விலையும் சேர்ந்த தொகை என்று பொருளாகும். ஏதேனும் வெறும் காணி தொடர்பில் முந்திய ஆண்டின் டிசம்பர் 31 ஆந் நாளன்று அக்காணியின் சந்தைப் பெறுமதி என்று பொருளாகும்.

(4) இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகள் அதன் சார்பில் அமைச்சரினால் நியமிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

## அத்தியாயம் IV

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழும் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழும் பாராதீனப்படுத்தப்பட்ட காணிகள் மீதான கட்டணங்கள்

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழும் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழும் பராதீனப்படுத்தப் பட்ட காணிகள் மீதான கட்டணங்கள்

8. காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ், மாகாணத்துக்குள்ளாக அமைந்துள்ள ஏதேனும் தொடர்பில் கொடுபடற்பாலதான ஏதேனும் கட்டணம் மாகாணத்தின் மாகாண இறைவரி ஆணையாளருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் V

### கனிப் பொருள் உரிமைகள் மீதான வரி

கனிப்பொருள் உரிமைகள் மீதான வரி.

9. (1) சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் அல்லது அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் மாகாணத்துக்குள்ளாக அமைந்துள்ள காணியிலிருந்து எவையேனும் கனிப்பொருட்கள் அகழ்வதற்கு, தேடுவதற்கு அல்லது பதனிடுவதற்கு, சேகரிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு உரிமம் எவரேனும் ஆளுக்கு வழங்கப்பட்டுள்ளவிடத்து, மாகாண சபை தீர்மானத்தின் மூலம், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அமைச்சரினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதத்தில் அல்லது வீதங்களில் அவ்வாறு வழங்கப்பட்ட அவரது உரிமைகள் தொடர்பில் அத்தகைய ஆளின் மீது இதன்கத்தின் பின்னர் "கனிப்பொருள் வரி" எனக் குறிப்பீடு செய்யப்படும் வரியொன்றை விதித்து அறவிடலாம்.

(2) ஓராமுட்பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட கனிப்பொருள் வரியின் வீதம் அல்லது வீதங்கள் உரிமத்தினால் வழங்கப்பட்ட உரிமைகளுக்கும் தொழில் மொத்த விற்பனவுக்கும் விகிதாசாரமாக இருத்தல் வேண்டும்.

(3) ஓராமுட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் கசெற்றில் அது வெளியிடப்பட்டதிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாக மாகாண சபை முன்னர் அதன் அங்கீகாரத்துக்கென வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அவ்வாறு அங்கீகரிக்கப்படாதவிடத்து, அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் VI

### தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழான கட்டணங்கள்

தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழான கட்டணங்கள்.

10. மாகாணத்துக்குள்ளாக இருக்கும் ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் சேகரிக்கப்பட்ட பணங்கள் அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் அக்கட்டணங்களை சேகரிக்கப்பட்ட உரித்துடைய அதிகாரியினால் சேகரிக்கப்படலாம் அல்லது மாகாண இறைவரி ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் சேகரிக்கப்படலாம். அத்துடன் எச்சந்தர்ப்பத்திலும் அத்தகைய கட்டணங்கள் மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் VII

### நிறுவைகள், அளவைகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் அறவிடப்படும் அறவீடுகள்

நிறுவைகள் அளவைகள் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குபடுத்துகிற அறவீடுகள்.

11. நிறுவைகள், அளவைகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் அறவிடப்பட்ட ஒழுங்குபடுத்தப்பட்ட அறவீடுகள் மாகாணத்துக்குள்ளாக அக்கட்டளைச் சட்டத்தின் கீழான அதிகாரியினால் சேகரிக்கப்பட்டு மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் இந்நியதிச் சட்டத்தின் குறித்த சில கருமங்களுக்கு ஏற்புடையதாதல்.

12. (1) இந்நியதிச் சட்டமானது, மத்திய மாகாணத்தில் 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்துக்கு குறை நிரப்பியாகும் எனக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன் மேற்சொல்லப்பட்ட நிதி நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகிக்கும் மாகாண இறைவரி ஆணையாளர் இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மாகாண இறைவரி ஆணையாளர் ஆதல் வேண்டும். அத்துடன் அவரது உதவியாளர்கள் அவர்களுக்கு மாகாண இறைவரி ஆணையாளரினால் குறித்தொதுக்கப்படக் கூடியவாறான எவையேனும் அத்தகைய தத்துவங்களை இந்நியதிச் சட்டத்தின் கீழ் பிரயோகிக்கலாம்.

(2) 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இ நிதி நியதிச் சட்டத்தின் கீழ் வரிகளையும் ஏனைய இறுப்பணவுகளையும் மதிப்பீடு செய்தல், அ கீழான மேல் முறையீடுகள். அதனகத்துக் கூறப்பட்ட விவரத் திரட்டுகள் மற்றும் தண்டங்கள் என பற்றிக் கையாளும் இறுப்பனவுகளையும் மதிப்பீடு செய்தல்,விவரத்திரட்டுக்கள்,தண்டங்கள் ெர்பில் ஏற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும். அத்துடன் இந்நியதிச் சட்டத்தின் கீழ் மாகா றைவரி ஆணையாளர், ஆணையாளரின் தத்துவங்கள் யாவும் மேற்கொல்லப்பட்ட கருமங்கள் ஏ தொடர்பாகவும் குறிப்பான ஏற்பாடுகள் இந்நியதிச் சட்டத்தில் அடங்கியிருந்தாலொழிய, அவரா நியதிச் சட்டம் தொடர்பாகப் பிரயோகிக்கப்படலாம்.

## அத்தியாயம் VIII

### பொது

13. இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் எதனையும் மீறுற அல்லது எதற்கும் இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள் இந்நியதிச் சட்டத்தின் கீழ் றொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னராக சுருக்கமுறை விளக்கத்தின் ன்னர் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தினால் அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்ப த ஒரு காலப்பகுதிக்கான சாதாரண மறியற்றண்டனையினால் அல்லது அத்தகைய குற்றப்பணம் றியற்றண்டனை ஆகிய இரண்டினாலும் தண்டிக்கப்படுவதற்கு ஆளாதலும் வேண்டும். — தவறுகளும் தண்டங்களும்.

14. இந்நியதிச் சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய – — பொருள் கோடல்.

"அமைச்சர்" என்பது நிதி என்னும் விடயத்துக்குப்பொறுப்பான அமைச்சர்கள் சபையின் அமைச்சர் என்று பொருளாகும்.

"மாகாணம்" என்பது இலங்கை சனநாயகக் குடியரசின் மத்திய மாகாணம் என்று பொருளாகும்.

"மாகாண சபை" என்பது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண மாகாண சபை என்று பொருளாகும்.

15. இந்நியதிச் சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். — ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

டப்ளிவ். எம். பீ. பி. திசாநாயக்க,
முதல் அமைச்சரும், நிதி, நீதியும் சமாதானமும்,
பிரதேச நிருவாகம், திட்டமிடல், காணி,
உள்ளூராட்சி, கல்வி அமைச்சரும்,
மத்திய மாகாண மாகாண சபை.

---

## மத்திய மாகாண மாகாண சபை

### 1996 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க (குறை நிரப்பு ஏற்பாடுகள்) நியதிச் சட்டம்

### 6 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 1996 ஆம் ஆண் 3 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் 6 (1) பிரிவின்படி எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினரும், முதலமைச்சரும், நிதி, நீதியும் சமாதானமும், பிரதேச நிருவாகம், திட்டமிடல், கா கல்வி, உள்ளூராட்சி அமைச்சருமான வீரசூரிய திசாநாயக்க முதியன்சேலாகே புஞ்சி பண்டா திசாநாயக்க ஆகிய நா 1997 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் யாதாயினுமொரு குதிரை ஓட்டப் போட்டியில் வைக்கப்பட்ட லது அது தொடர்பில், பெறப்பட்ட எந்தவொரு பந்தயத்திற்கும் நூற்றுக்கு 5 வீத வரியை விதித்துரைக்கின்றேன்.

டப்ளிவ். எம். பீ. பி. திசாநாயக்க,
முதல் அமைச்சரும், நிதி, நீதியும் சமாதானமும்,
பிரதேச நிருவாகம், திட்டமிடல்,
காணி, உள்ளூராட்சி, கல்வி அமைச்சரும்,
மத்திய மாகாண மாகாண சபை.

கண்டி,
1996 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆம் திகதி.